## 4. கற்பியல்

1088 கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே.
1089 கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன்போகிய காலையான.
1090 மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே.
1091 பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.

Scanned by TapScanner

1092 கரணத்தின் அமைந்து முடிந்தகாலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்சவந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப்படரும் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத்து உண்டு எனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும், சொல்லென
ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு என
அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்,
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும், ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்
அந்தரத்து எழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்,
அழியல் அஞ்சல் என்று ஆயிரு பொருளினும்
தான் அவள் பிழைத்த பருவத்தானும்,
நோன்மையும் பெருமையும் மெய் கொள அருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்,
புதல்வன் பயந்த புனிறு தீர்பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணை புல்லிய புல்லாது
உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப்
புல்கென முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடல் மிகுத்தோளைப்
பிற பிற பெண்டிரின் பெயர்த்தற் கண்ணும்

பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பிரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்,
சென்று கையிகந்து பெயர்த்து உள்ளிய வழியும்
காமத்தின் வலியும், கைவிடின் அச்சமும்,
தான் அவள் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறல் செய்கையோடு அன்னவை பிறவும்
மடம்படவந்த தோழிக் கண்ணும்,
வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்தானும்
மீட்டுவர ஆய்ந்த வகையின் கண்ணும்,
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்,
பேர் இசை ஊர்திப் பாகர் பாங்கினும்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்ற தேஎத்து உழப்பு நனிவிளக்கி
இன்றிச்சென்ற தன்னிலை கிளப்பினும்,
அருந்தொழில் முடித்த செம்மல் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனை வாயில் எதிரொடு தொகைஇப்
பண்ணமை பகுதி முப்பதினொருமூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன்மேன.

1093 அவன் அறிவாற்ற அறியுமாகலின்
ஏற்றற் கண்ணும், நிறுத்தற் கண்ணும்,
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்
பெருமையின் திரியா அன்பின் கண்ணும்,
கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்,
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்,
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியின் நீக்கிய இளிவரு நிலையும்,
புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு
அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி
இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த் தருக்கி

எதிர்பெய்த்து மறுத்த ஈரத்து மருங்கினும்,
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க்கு உரை என இரத்தற் கண்ணும்,
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக்கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்,
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு தன் வரவு அறியாமைப்
புறம்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்,
தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்,
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்,
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கயைர் காணின் நன்று என
மாதர் சான்ற வகையின் கண்ணும்,
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும்,
தன்வயின் சிறைப்பினும், அவன் வயின் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்,
காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கணணும்,
கொடுமை ஒழுக்கத்துத் தோழிக்கு உரியவை
வடுவறு சிறப்பின் கற்பின் திரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் உரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவதென்ப.

1094 புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து
இடைச் சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும்.

1095 தோழி உள்ளுறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்பமனார் புலவர்.

1096 பெறற்கு அரும் பொருள் முடிந்தபின் வந்த
தெறற் கரு மரபின் சிறப்பின் கண்ணும்,
அற்றம் அழிவு உரைப்பினும், அற்றம் இல்லாக்
கிழவோள் சுட்டிய தெய்வக் கடத்தினும்,
சீருடைப் பெரும்பொருள் வைத்த வழி மறப்பினும்,
அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்,
பிழைத்து வந்திருந்த கணவனை நெருங்கி
இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தற் கண்ணும்,
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்,
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியும்
சிறந்த புதல்வனை நேராது புலம்பினும்
மாண் நலம் தா என வகுத்தற் கண்ணும்
பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்
சூள் நயத்திறத்தால் சோர்வு கண்டு அழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை இல்லாப் பிழைப்பினும், அவ்வயின்
உறுதகை இல்லாப் புலவியுள் மூழ்கிய
கிழவோள் பால் நின்று கெடுத்தற் கண்ணும்,
உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள் வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால் நின்று
தான் வெகுண்டாக்கிய தகுதிக் கண்ணும்,
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எண்மைக் காலத்து இரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்,
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையின் கண் இன்று பெயர்ப்பினும்
பிரியுங்காலை எதிர் நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக்குரிய என்பமார் புலவர்.

1097 புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்,
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்,
பல்வேறு புதல்வர்க் கண்டு நனி உவப்பினும்,
மறையின் வந்த மனையோள் செய்வினை

Scanned by TapScanner

பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்,
காதல் சோர்வில் கடப்பாட்டு ஆண்மையின்
தாய்போல் தழீஇக் கழறியம் மனைவியைக்
காய்வின்று அவன்வயின் பொருத்தற் கண்ணும்
இன்நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து,
பின்னர் வந்த வாயிற் கண்ணும்,
மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர்
மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணும்,
எண்ணிய பண்ணை என்று இவற்றொடுபிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன.

1098 கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்,
மெல்லியற் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்,
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்,
முகம் புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்
அகம் புகல் மரபின் வாயில்கட்கு உரிய.

1099 கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக்குரிய ஆகும் என்ப.

1100 சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய.

1101 இடித்துரை நிறுத்தலும் அவரதாகும்
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்

1102 உணர்ப்புவரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும்,
புலத்தலும் ஊடலும் கிழவோற்குரிய.

1103 புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்
சொலத் தகு கிளவி தோழிக்குரிய.

1104 பரத்தை மறுத்தல் வேண்டியும், கிழத்தி
மடத்தகு கிழமை உடைமையானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள்.

1105 அவன் குறிப்பு அறிதல் வேண்டியும், கிழவி
அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.

1106 காமக்கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங்காலை கிழவோற்கு உரித்தே
வழிபடு கிழமை அவட்கியலான.

1107 அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி

பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே.
1108 களவும் கற்பும் அலர் வரைவு இன்றே.
1109 அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே.
1110 கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே.
1111 மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை
தம் உளவாதல் வாயில்கட்கு இல்லை.
1112 மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே.
1113 முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்.
1114 தொல்லவை உரைத்தலும், நுகர்ச்சி ஏத்தலும்,
பல்லாற்றானும் ஊடலின் தணித்தலும்
உறுதி காட்டலும், அறிவு மெய் நிறுத்தலும்,
ஏதுவின் உணர்த்தலும், துணிவு காட்டலும்,
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன.
1115 நிலம்பெயர்ந்து உரைத்தல், அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.
1116 ஆற்றது பண்பும், கருமத்து விளைவும்,
ஏவல் முடிவும், வினாவும், செப்பும்,
ஆற்றிடைக் கண்டபொருளும், இறைச்சியும்,
தோற்றம் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப.
1117 உழைக்குறும் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு
நடக்கை எல்லாம் அவர்கட் படுமே.
1118 பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்
மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்
இறந்தது நினைஇக் கிழவோன் ஆங்கண்
கலங்கலும் உரியன் என்மனார் புலவர்.
1119 தாய் போல் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவ வொடு மயங்கிய காலையான
1120 அவன் சோர்பு காத்தல் கடன் எனப்படுதலின்
மகன் தாய் உயர்பும் தன் உயர்பாகும்
செல்வன் பணிமொழி இயல்பாகலான.
1121 எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்.

1122 புறத்தோர் ஆங்கண் புரைவதென்ப.
1123 காமநிலை உரைத்தலும், தேர்நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்,
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்,
செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்,
அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு உரிய.
1124 எல்லாவாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப.
1125 அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றின்
சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர்.
1126 தற்புகழ்க் கிளவி கிழவன் முன் கிளத்தல்
எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே.
1127 கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப.
1128 மொழி எதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே.
1129 குறித்து எதிர்மொழிதல் அஃகித் தோன்றும்.
1130 துன்புறு பொழுதினும் எல்லாம் கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை.
1131 செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும்.
1132 கிழவி நிலையே வினையிடத்து உரையார்;
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.
1133 பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்;
பரத்தையின் பிரிந்த காலையான.
1134 வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது.
1135 வேந்துறு தொழிலே யாண்டினது அகமே.
1136 ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்.
1137 யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப.
1138 காமம் சான்ற கடைக் கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.
1139 தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,

பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.
1140 வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச் சுர மருங்கில் தவிர்தல் இல்லை;
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்இயல் கலிமா உடைமை யான.

Scanned by TapScanner